**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்**

**முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்**

திருவள்ளுவர் ஆண்டு 2056 ஆண்டு விசுவாவசு வருடம், ஆவணி மாதம் 17 ம் நாள்

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 02-ம் நாள் செவ்வாய்கிழமை

**இடைக்கால மனு எண்.3/2025**

**in**

**அசல் வழக்கு எண். 30/2021**

1. காளிமுத்து ...**மனுதாரர்/வாதி**

//எதிர்//

1. D. மல்லிகா

2. வருவாய் கோட்டாட்சியர்
 கோவை, தெற்கு

3. வட்டாட்சியர், சூலூர் தாலூக்கா ... **எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இந்த மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.தனராஜ், அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.லதா அவர்கள் ஆஜராகியும், 2 மற்றும் 3ம் எதிர்மனுதாரர்கள் ஒருதலைபட்சமாகியும் இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

22.10.2024 தேதியில் வாதியால் தாக்கல் செய்யப்பட்ட பிரமாண வாக்குமூலத்தில் திருத்தம் மேற்கொள்ள வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 17 ன் பிரிவு R/w 151 ன் கீழ் இம்மனு மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:**

1.1). மனுவானது பிரமாண வாக்கு மூலத்தில் எழுத்துப்பிழை ஏற்பட்டதாகவும் 22.10.2024 அன்று தாக்கல் செய்யப்பட்ட பிரமாண வாக்குமூலத்தில் எழுத்துப்பிழை ஏற்பட்டதாகவும் அதை திருத்தம் செய்ய வேண்டி மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2). 1,2 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :**

2.1). மேற்படி மனு பொய்யானது, மோசடியானது. மேற்படி மனுவானது சட்டப்படியும், நியாயப்படிக்கும் நிலைநிற்கத்தக்கதல்ல. மனுதாரர் கடந்த 22.10.2024 அன்றே வாதி தரப்பு சாட்சியாக நீதிமன்றத்தில் ஆஜராகி, பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்து அது இந்நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு வா.சா.ஆ.1 முதல் 7 வரை வா.சா.1 ல் குறியீடும் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் வா.சா.1 பிரமாண வாக்குமூலத்தினை திருத்தம் செய்யக்கோரி தாக்கல் செய்திருக்கும் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர் தனது மனுவில் பத்தி 7 ல் "7 ஏக்கர் 50 செண்ட் என்று குறிப்பிட்டு நிலையில் வழக்குரையில் இல்லாத புதிய சங்கதிகளை சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் கூடுதலாக அளிக்க மனுதாரருக்கு எந்தவித உரிமையும் இல்லை. அதேபோல் பத்தி 9 ல் " 15 அடி அகலம் 256 அடி நீளம்" என்பதனை "10 அடி அகலம் 490 அடி நீளம்" என திருத்தம் செய்யக் கோரியிருக்கும் பரிகாரமும் செல்லத்தக்கதல்ல. ஏனெனில் இதுவும் வாதி தாக்கல் செய்திருக்கும் வழக்குரையில் காணப்படாத புதிய சங்கதிகள் ஆகும். மனுதாரர் வழக்கு பிராதில் கூறப்பட்டுள்ள சங்கதியின் அடிப்படையில் பிரமாண பத்திரிக்கையில் அச்சங்கதியை கூறிவிட்டு தற்சமயம் அச்சங்கதியை நீக்கி திருத்தம் செய்து வேறு ஒரு சங்கதியை வழக்கு பிராதில் குறிப்பிட மனுதாரருக்கு உரிமையில்லை. மேலும் வழக்கு பிராதின் அடிப்படையில் பிரமாணபத்திரிக்கையை வழக்கு விசாரணையில் முதல் தரப்பு சாட்சியமாக தாக்கல் செய்து அதனை நீதிமன்றம் பெற்றுக்கொண்டு அதற்குரிய சான்றாவணமாக ஆவணங்களை நீதிமன்றத்தில் குறியீடு செய்த பின்பு அந்த

பிரமாண பத்திரிக்கையில் மனுதாரர் கோரியுள்ள திருத்தம் செய்ய சட்டத்தின் அடிப்படையில் உரிமையில்லை. அது செல்லத்தக்கதல்ல. எனவே, மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**3.** இம்மனு அனுமதிக்கதக்கதா? என்பதே தீர்வுகாணப்பட வேண்டியுள்ளது.

**4.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**5.** மனு பிரமாணப்பத்திரிக்கை, எதிருரை, மற்றும் இருதரப்பு வாதுரைகள் கவனமாக பரிசீலிக்கப்பட்டன. அசல் வழக்கானது வா.சா.1 முதல் விசாரணை தொடர்ச்சி யில் நிலுவையில் உள்ளது.

5.1). உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 6 விதி 17 சட்ட பிரிவின்படி வழக்குரையில் வாதுரையில் திருத்தம் செய்ய மேற்படி சட்டப்பிரிவு அனுமதி அளிக்கிறது. ஆனால் மனுதாரர்கள் தரப்பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட சாட்சியத்தை திருத்தம் செய்ய மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சாட்சியத்தை மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சாட்சியத்தை திருத்தம் செய்ய முடியாது. பிரமாண வாக்குமூலத்தில் தவறு இருப்பின் அது பற்றி மனுதாரர் கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் சாட்சியம் அளிக்கலாம். பிரமாண வாக்குமூலத்தை திருத்தம் செய்ய கூறியுள்ள இந்த மனு ஏற்புடையதல்ல.

**முடிவாக மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 02-ம் நாள் செவ்வாய்கிழமை இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/M.Santhosham

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** :- இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** :- இல்லை

Sd/M.Santhosham
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

Draft/Fair order
IA.No.3/2025
in
OS.30/2021
Dated:.02.09.2025
DMC, Sulur.